**பஸ்ஸர பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

நிதிக் கூற்றுக்களானவை பஸ்ஸர பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது முறையான சபை அங்கீகாரம் பெறாமல் ரூபா 2,544,600 தொகை பெறுமதியான நிலையான சொத்துக்களை கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட கப் வண்டி ஒன்றினை ஏல விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்க வேண்டிய பணம் ரூபா 55,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டிற்கான முத்திரைக் கட்டணத்திற்காக மிகையாக ஒதுக்கிய ரூபா 304,106 தொகையினை மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்திருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ் சபைக்கு கிடைத்திருந்த நடமாடும் 05 குடில்களின் பெறுமதி ரூபா 132,500 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 81,561 தொகைக்கான ஓய்வூதியக் கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகளிடையே ரூபா 283,465 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

----------------------------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 25,840,009 தொகையாகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 19,935,250 தொகை ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------------

ரூபா 77,844,306 இற்கான 04 கணக்கு விடயங்கள், விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | |
| (i) 147 ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்திருந்த முச்சக்கர வண்டிகளில் இருந்து துணை விதிகள் ஆக்கப்பட்டு கட்டணம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 154(1) ஆம் பிரிவு | சபையின் அதிகாரப் பிரசேத்தைச் சேர்ந்த துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த காணி ஒன்று தொடர்பாக விற்பனை பெறுமதியில் நூற்றிற்கு ஒன்று (1%) இற்கு சமமான வரியொன்று விற்பனையாளரிடம் சபை நிதியத்திற்கு அறவீடு செய்திருக்கவில்லை. |
| (iii) 132(ஓ) மற்றும் (ஔ) ஆம் பிரிவுகள் | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை பெற்றிருக்காமல் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 70,640 தொகைக்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

(ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை

--------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | 217 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| (ii) | 218 ஆம் விதி | கணிப்பீட்டுச் சபை ஒன்றின் மூலம் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2015 ஆண்டிற்கான பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

(இ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

--------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 189 | கடை வாடகையாகக் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 72,712 பெறுமதியான 03 காசோலைகளின் பெறுமதியை சபைக்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 371 | 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணம் ரூபா 88,496 தொகையினை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,803,722 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,609,095 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-----------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக பிரதேச சபை நிதியத்திற்கு பெற வேண்டியிருந்த நிலுவை வருமானம் ரூபா 900,038 தொகை காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக சிட்டையிடப்பட்ட வருமானத்தில் ரூபா 1,213,939 தொகை அதாவது 10% அத் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது.

2.2.2 கடை வாடகை

------------------------

சபைக்குச் சொந்தமான 05 கடைகள் 2014, 2015 ஆகிய ஆண்டுகளிலும்து கேள்விகோரப்பட்டு வாடகை வருமானம் ஒன்றினை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு கடை வாடகை வருமானத்தை இழந்துள்ளதுடன் அக் கடைகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 வரை ரூபா 275,000 தொகையான நிலுவை கடை வாடகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 முச்சக்கர வண்டிக் கட்டணம்

-----------------------------------------------

சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 306 முச்சக்கர வண்டிகளில் இருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 1,075,450 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 4,556,181 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,603,301 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணிகளை துண்டுகளாகப் பிரித்து விற்பனை செய்யப்பட்ட காணிகளில் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த வரைவு இலக்கம் 3221 இல் லொட் இலக்கம் 38 காணித் துண்டின் உரிமையை எழுத்துமூலமாக சபைக்கு உரிதாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சுற்றாடல் சார் சிக்கல்கள்

----------------------------------------------

1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் பிரகாரம் குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்காக சபையின் குறிக்கோள்களுக்கு இணங்கி செய்யப்பட வேண்டும். எனினும் திறந்த பிரதேசம் ஒன்றில் குப்பைகளை குவிப்பதன் காரணமாக சுற்றியுள்ள பகுதிகளுக்கு சுற்றாடல் சார் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க முடியாதிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு, வருமானம் மற்றும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-----------------------------------------------------

நடைமுறை ஆண்டின் போது வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு